


**04.02.2025**

தலைப்பு செய்திகள்

1. குடியரசு தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி மக்களவையில் இன்றுமாலை பதிலளிக்கிறார்.

2. பிரதமரின் தொழில்பயிற்சி திட்டத்திற்கு மிகப்பெரிய வரவேற்பு உள்ளதாக மத்திய அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் மாநிலங்களவையில் தெரிவித்துள்ளார்

3.விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு முனைப்புடன் மேற்கொண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சிவ்ராஜ்சிங் சவுஹான் கூறியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் அனைத்து பள்ளிகளிலும் சூழல் மன்றங்கள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

5. ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வாக்குப்பதிவை ஒட்டி நாளை பொதுவிடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

தீர்மானம்

குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று மக்களவையில் பதிலளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாலை 5 மணிக்கு மக்களவையில் பிரதமர் பதிலளிக்கக்கூடும் என்று நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு தமது சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் இன்று பேசிய மூத்த பி.ஜே.பி. உறுப்பினர் திரு. பன்சிலால் குர்ஜர், பிரதமர் திரு. நரேந்திரமோடியின் தலைமையில் இந்தியா மேம்பாடு மற்றும் வளர்ச்சிப்பாதையில் ஆக்கப்பூர்வமாக முன்னேறி செல்வதாக குறிப்பிட்டார்.

கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசின் செயல்பாடுகளால் வளர்ச்சியடைந்த பாரத இலக்கு முன்னதாகவே எட்டப்படும் என்றார்.

அடித்தட்டு மக்களுக்கான பல்வேறு அரசின் நலத்திட்டங்களை அவர் சுட்டிக்காட்டினார்.

மக்களவையில் இந்த விவாதத்தின் மீது பேசிய சமாஜ்வாடி கட்சித்தலைவர் திரு. அகிலேஷ் யாதவ் நம்நாட்டில் காணப்படும் பல்வேறு வளங்களும், திறன்களும் தற்போதைய ஆட்சியில் முறையாக பயன்படுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டார்

நவீன கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டதாக அரசு கூறும் இத்தருணத்தில் மக்களின் எதிர்பார்ப்புகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்று அவர் குறை கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

<u>நிர்மலா சீதாராமன்</u>

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் தொழில்பயிற்சி திட்டத்திற்கு இளைஞர்களிடையே மிகப்பெரிய வரவேற்பு காணப்படுவதாக மத்திய பெருநகர விவகாரங்கள் துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதிலளித்த அவர், 743 மாவட்டங்களில் ஆர்வமுடைய இளையோருக்கு தொழில் பயிற்சிகள் தற்போது வழங்கப்படுவதாக கூறினார்.

இந்த திட்டத்தின் முன்னோடியாக பல்வேறு தொழிற்சாலைகள் ஒருலட்சத்து 27 ஆயிரம் தொழில் வாய்ப்புகளை வழங்கியிருப்பதாகவும்,

இதன்கீழ் 28 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொழில்பயிற்சியை பெற்றுவருவதாகவும் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தின் 2-வது கட்டப்பணிகள் சென்றமாதம் தொடங்கிய நிலையில் 80 தொழிற்சாலைகள் பல்வேறு வாய்ப்புகளை இளையோருக்கு வழங்கியிருப்பதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

<u>சிவ்ராஜ்சிங் சவுஹான்</u>

மத்தியில் பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான அரசு, விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ்சிங் சவுஹான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர், 2019-ம் ஆண்டு தொடங்கி, 50 சதவிகித லாபத்தை நோக்கமாக கொண்டு குறைந்தபட்ச ஆதரவு விலையை அரசு நிர்ணயிப்பதாக கூறினார்.

தென்னை உற்பத்தியில் உலகநாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது திருப்திகரமாக இருப்பதாக கூறிய அமைச்சர், தென்னையை தாக்கும் நோய்களை கையாள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

ஸ்ரீபத் நாயக்

நாட்டின் மின்உற்பத்தி அடுத்த 6 ஆண்டுகளில், 874 ஜிகாவாட் அளவிற்கு அதிகரிக்க திட்டமிடப் பட்டுள்ளதாக மத்திய மின்துறை இணையமைச்சர் திரு. ஸ்ரீபத் நாயக் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று எழுத்துபூர்வமாக அவர் அளித்த பதிலில், நிலக்கரி, பழுப்பு நிலக்கரி புதுப்பிக்கத்தக்க வள ஆதாரங்களான சூரிய சக்தி, காற்று, புனல் மின் சக்திகளிலிருந்து மரபு சார்ந்த உற்பத்தியும் இதில் உள்ளடக்கப் பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

தற்போது 462 ஜிகாவாட் அளவிற்கு மின்உற்பத்தி செய்யப்படுவதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

2014-ம் ஆண்டு நிலவிய மின் பற்றாக்குறையை சரிசெய்யும் வகையில் கூடுதலாக 230 ஜிகாவாட் மின் உற்பத்தி திட்டங்களை மேற்கொண்டு தேவையான மின் உற்பத்திக்கு மத்திய அரசு வழிகோலியதாகவும் அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

தீவிரவாதம் மற்றும் நெருக்கடிகள் குறித்து உலகளவில் பாரபட்சமான விமர்சனங்கள் முன்வைக்க படுவதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் இன்று உரையாற்றிய அவர், தீவிரவாத விமர்சனங்கள் சந்தர்ப்பவாதமாக உள்ளதாகவும், ஆசியாவில் நடைமுறையில் உள்ள சர்வதேச சட்டங்கள் மதிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

நம்நாட்டின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் வெவ்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதாக கூறினார்.

இந்திய, ஐரோப்பிய உறவுகள் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு தற்போது முக்கியத்துவம் பெறுவதாக கூறிய அமைச்சர், தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் மின்னனு பணபரிவர்த்தனை மற்றும் தொழில்நுட்ப கட்டுப்பாடுகள் கையாள்வதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

தென்கிழக்காசிய உறவுகள் வாயிலாக கிழக்கு சார்ந்த சாலை தொடர்புகளை கட்டமைக்கும் முயற்சிகளை இந்தியா மேற்கொள்வதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பள்ளிகளிலும் சூழல் மன்றங்கள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

3-வது காலநிலை உச்சிமாநாட்டை சென்னையில் இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், இயற்கை வளங்களை பாதுகாக்க சமூக அக்கறையுடன் அனைவரும் செயலாற்ற வேண்டும் என்று கூறினார்.

.. வாய்ஸ் ..

இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை விருதுகளை முதலமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

<u>முதலமைச்சர் தொடர்ச்சி</u>

சென்னை தலைமை செயலகத்தில் மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 108 அவசரகால ஊர்திகள், மலை நிலபரப்புகளுக்கான புதிய 4 சக்கர அவசரகால ஊர்திகளின் சேவைகளை முதலமைச்சர் துவக்கி வைத்தார்.

உணவு பாதுகாப்புத்துறையில் இளநிலை பகுப்பாய்வாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்ட 31 பேருக்கு பணி நியமன ஆணைகளை அவர் வழங்கினார்.

தமிழ் இணைய கல்விக்கழகத்தின் சார்பில் உருவாக்கப்பட்ட சிறப்பு இணையபக்கத்தையும் முதலமைச்சர் தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

<u>தேர்தல்</u>

டெல்லியில் 70 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக நாளை நடைபெறும் வாக்குப் பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.

காலை 7 மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை தொடர்ந்து நடைபெறும்.

இத்தேர்தலில் 699 வேட்பாளர்களின் வெற்றியை ஒருகோடியே 56 லட்சம் வாக்காளர்கள் நிர்ணயிக்க உள்ளனர்.

தேர்தலை ஒட்டி டெல்லி மெட்ரோ ரயில் சேவைகள் அதிகாலை 4 மணிக்கே நாளை தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பணியில் அலுவலர்கள் ஈடுபட வசதியாக அனைத்து தடங்களிலும் காலை 6 மணி வரை, 30 நிமிடங்களுக்கு ஒருமுறை ரயில் போக்குவரத்திற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

<u>ஈரோடு இடைத்தேர்தல்</u>

ஈரோடு கிழக்கு மற்றும் உத்தரபிரதேச மாநிலம் மில்கிபூர் சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நாளை நடைபெறும் இடைத்தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனிடையே ஈரோடு கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் நாளை பொதுவிடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திரு. ராஜகோபால் சுங்கரா தெரிவித்துள்ளார்.

வாக்குச்சாவடிகளில் பணியாற்றும் அலுவலர்களுக்கான இறுதிகட்ட பயிற்சி மற்றும் பணி ஆணைகளை வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட பகுதிகள் மற்றும் அண்டை மாவட்டங்களில் பணிபுரிபவர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்க உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாக கூறினார்.

இந்த உத்தரவு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பொருந்தும் என்றும், உத்தரவை கடைபிடிக்காத நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

.. வாய்ஸ் ..

இதனிடையே துப்பாக்கி ஏந்திய மத்திய தொழில் பாதுகாப்பு படைவீரர்களின் பந்தோபஸ்துடன் மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்குச்சாவடிக்கு கொண்டு செல்லப்பட்டன.

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதியில் 237 வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, வாக்களிக்க 850 வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இடைத்தேர்தல் பணியில் ஆயிரத்து 195 அலுவலர்களும், பாதுகாப்பு பணியில் 2 ஆயிரத்து 675 காவலர்களும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தேர்தல் மற்றும் இடைத்தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் சனிக்கிழமை எண்ணப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖

<u>தேனி - ரயில்</u>

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் மற்றும் மதுரை அகல ரயில்பாதை வழித்தடத்தில் மின்மயமாக்கல் பணிகள் நிறைவுபெற்றதை அடுத்து இன்றுமுதல் இப்பாதையில் மின்சார இரயில்கள் இயக்கப்படுவதாக எமது தேனி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

<u>பி.ஜே.பி போராட்டம்</u>

கன்னியாகுமரி, திருவாரூர், நாமக்கல் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பி.ஜே.பி-யினர் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருப்பரங்குன்றத்தில் இந்து அமைப்புகள் சார்பில் நடைபெறவிருந்த பேராட்டத்தை ஒட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பா.ஜ.க. தலைவர்கள் வீட்டுகாவலில் வைக்கப்படுவதை கண்டித்து இந்நடவடிக்கை.

❖❖❖❖❖❖❖❖❖

<u>ஜோதிர் ஆதித்ய சிந்தியா</u>

வடகிழக்கு மண்டல மேம்பாட்டு அமைச்சகத்தின் சார்பில், வடகிழக்கு வர்த்தக முதலீட்டு ஊக்குவிப்பு பேரணியை இத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா நாளை சென்னையில் துவக்கி வைக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

<u>இருவரி</u>

அரியலூர் மாவட்டத்தில் கரும்பு பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இதன் காப்பீடு திட்டத்தில் இணைந்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திரு.ரத்னசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் புதிய குடும்ப அட்டைகள் அச்சிடும் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களுக்கு காலதாமதமின்றி விநியோகிக்க துறை அலுவலர்களுக்கு ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் வரும் 21-ம் தேதியிலிருந்து அடுத்தமாதம் 2-ம் தேதிவரை மன்னர் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் புத்தக திருவிழா நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் நீதிபதி டாக்டர்.வீ.ராமராஜ் தலைமையில் 8 ஆண்டு நிலுவை வழக்கிற்கு, எட்டே நாட்களில் தீர்வு காணப்பட்டு மனுதாரருக்கு உரிய பயன்கள் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

<u>ஆமை</u>

புதுக்கோட்டை மாவட்டம் கட்டுமாவடி முதல் ஏனாதி வரையிலான கடலோர பகுதியில் ஆமை இனப்பெருக்கம் நடைபெறும் காலமாக இருப்பதால், மீனவர்களின் வலையில் ஆமைகளோ, கடற்பசுக்களோ சிக்கினால் அவற்றை கடலில் திரும்ப விட்டுவிட ஆட்சித்தலைவர் திருமதி. அருணா அறிவுறுத்தியுள்ளார்.

மீறுவோர் மீது தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

<u>டென்னிஸ்</u>

சென்னை ஓப்பன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - இங்கிலாந்தின் **Jay Clarke**-ஐ தற்போது எதிர்கொண்டுள்ளார்.

அதேபோல் முகுந்த் சசிகுமார் - ரஷ்யவீரர் **Alexey Zakharov** உடன் இன்று மோதுகிறார்.

❖❖❖❖❖❖❖❖

<u>டேபிள் டென்னிஸ்</u>

சிங்கப்பூர் டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் மனுஷ் ஷா, தியா சிட்டாலே இணை - மெக்சிக்கோ இணையை இன்று எதிர்கொள்கிறது.

மகளிர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் அய்க்கா, சுதிர்த்தா இணை - தாய்லாந்து இணையையும்,

இந்தியாவின் யஸஷ்வி, ஆஸ்திரேலியாவின் மின்ஹியங் இணை - ஸ்வீடன் இணையையும் இன்று எதிர்கொள்கின்றன.

❖❖❖❖❖❖❖❖